



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (04.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு170, பள்ளிப்பட்டு பிரதான சாலையில் ரூ.40.42 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மகளிர் உடற்பயிற்சிக் கூடத்தினைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ், மாமன்ற உறுப்பினர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–152, வளசரவாக்கம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை குடிநீர் வாரியம், ரூ.27.67 கோடி மதிப்பீட்டில் வளசரவாக்கம் பகுதிக்கான குடிநீர் மேல் நிலை நீர்த் தேக்க தொட்டியை பொது மக்கள் பயன்பாட்டிற்காக நேற்று (05.02.2026) முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, கலந்து கொண்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., இரா. பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., ச.சங்கர்கணேஷ், எம்.சி., ஜெ.பாஸ்கரன், காங்கிரஸ் பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (5.2.2026) அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் மே மாதம் கோடை விடுமுறை மற்றும் மேற்பார்வையாளர் நிலை– II முதுநிலை பட்டியல் தயாரிக்கும் போது, குறு அங்கன்வாடி பணியாளர் பணி ஏற்ற நாளினையும் சேர்த்து முதுநிலை பட்டியல் தயாரிக்க அனுமதி ஆகிய இரண்டு அரசாணைகளையும் அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர் சங்கங்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் குழும இயக்குநர் திருமதி ஐ.சா. மெர்சி ரம்யா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உயர்கல்வியின் கிரீடமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது!

### அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பெருமிதம்!

சென்னை,பிப்.6-

நேற்று (05.02.2026) சென்னை, அண்ணா பல்கலைக்கழக விவேகானந்தா அரங்கில் நடைபெற்ற அண்ணா பல்கலைக்கழக கிண்டி பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் 841 மாணாக்கர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது:-

உயர்தர தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதில் அண்ணா பல்கலைக்கழகம் ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. மேலும், இது நாட்டின் பழமையான தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. அண்ணா பல்கலைக்கழக கிண்டி பொறியியல் கல்லூரி 1794ஆம் ஆண்டு நிறுவப்பட்ட உலகின் மிகப் பழமையான நிறுவனங்களில் ஒன்றாகும். 4 பல்கலைக்கழகத் துறைகள், 16 தொகுதிக் கல்லூரிகள் மற்றும் 476 இணைப்புக் கல்லூரிகளை உள்ளடக்கியது.

மேலும், கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி (எம்.ஐ.டி) மற்றும் SAP வளாகங்களில் உள்ள 36 துறைகளால் 32 இளங்கலை மற்றும் 88 முதுகலை படிப்புகள் வழங்கப்படுகின்றன. கிண்டி பொறியியல் கல்லூரியில் 1,876 மாணாக்கர்கள் பயில்கின்றனர். அழகப்பா தொழில்நுட்ப கல்லூரியில் 516 மாணாக்கர்கள் பயில்கின்றனர். கட்டட கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் 102 மாணாக்கர்கள் பயில்கின்றனர். மெட்ராஸ் தொழில்நுட்ப கழகத்தில் 894 மாணாக்கர்கள் பயில்கின்றனர்.

உலகளவில் 2026ஆம் ஆண்டுக்கான QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையில், 465 வது இடம்; இந்தியப் பல்கலைக்கழகங்களில் 10வது இடம். டைம்ஸ் உயர் கல்வியின் (THE) பல்துறை சார்ந்த அறிவியல் தரவரிசை 2025 இல், இந்தியாவில் முதலாவது இடம்; உலகளவில் 42 வது இடம். தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) தரவரிசைப் பட்டியல் 2025 இல் மாநில பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடம். NIRF, புதுமைப் பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் 9 வது இடம். ஆராய்ச்சி நிறுவனங்களில் 2 வது இடம். இந்தியாவில் உள்ள பொறியியல் நிறுவனங்களில் 20வது இடம். இவ்வாறு பல்வேறு தரவரிசை பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் முதன்மை இடத்தை பிடித்து, நாட்டின் முதன்மையான பல்கலைக்கழகமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு உயர்கல்வியின் கிரீடமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

மையப்படுத்தப்பட்ட ஆய்வக வசதிகள், செயற்கை நுண்ணறிவு தளங்கள், மின்னணு-வளங்களை உருவாக்குவதற்கு தமிழ்நாடு அரசு ரூ. 1,380.20 கோடி வழங்கியுள்ளது. 2024-2025 கல்வியாண்டில், அண்ணா பல்கலைக்கழகத்தில் மொத்தம் 1,50,495 மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர். 584 மாணவர்கள் முன்னணி தொழில் துறை நிறுவனங்களில் பயிற்சி பெற்றனர். பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்புப் பிரிவின் மூலம் 256 உயர்தர நிறுவனங்களில் 1,339 மாணவர்கள் அதிகபட்சமாக ரூ. 53 லட்சம் ஆண்டு ஊதியத்துடன் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

உலகளாவிய வெளிப்பாட்டையும் சர்வதேச அளவில் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காக, ஜெர்மன், ஜப்பானிய, ஸ்பானிஷ், கொரிய மற்றும் தைவானிய மாண்டரின் மொழிகளில் வெளிநாட்டு மொழிப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத்தின் (CMRG) கீழ், ஆசிரியர்களுக்கு 79 ஆராய்ச்சி திட்டங்களும், மாணவர்களுக்கு 6 ஆராய்ச்சி திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆளில்லா வான் வழி வாகனம் (UAV) மற்றும் கூட்டு காற்றாலைகளின் மறுசுழற்சி ஆகிய இரண்டு திட்டங்களுக்காக ரூ. 18.66 கோடி பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் 220 h-குறியீடு பெற்றுள்ளனர். பல்கலைக்கழகம் தாக்கல் செய்த 89 காப்புரிமைகளில், 69 மானியங்களைப் பெற்றுள்ளது. தேசிய உயர் கல்வித் திட்டம் (RUSA) 2.0 திட்டத்தின் கீழ், மொத்தம் 815 மாணவர்களின் பங்கேற்புடன் 20 உயர்தர திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், 35 கோடி நிதிக் கொடையுடன் மின்சார வாகன தொழில்நுட்பங்கள்- சாமர்த்தியமான பொருள் பண்புகள், உற்பத்தி மற்றும் கட்ட மேலாண்மை என்ற தலைப்பில் திட்டம் நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் ஆய்வக மேம்பாட்டிற்காக, புதிய ஆராய்ச்சி பூங்கா மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்த ரூ. 500 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் கிண்டி பொறியியல் கல்லூரியினை சேர்ந்த 348 பெண்கள் மற்றும் 493 ஆண்கள் என மொத்தம் 841 இளநிலை மாணாக்கர்கள் பட்டம் பெறுகின்றனர்.

2024-25ஆம் கல்வியாண்டில் (அண்ணா பல்கலைக்கழக 4 உறுப்பு கல்லூரிகளையும் சேர்த்து) அரசு திட்டங்கள் மூலம் பயன் பெறுபவர்கள் 1,834 முதல் தலைமுறை பட்டதாரிகள், 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் 619 மாணவர்கள், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 1,05,000 மாணாக்கர்கள் திறன் பயிற்சி பெறுகின்றனர். புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 470 மாணவிகள், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் 416 மாணவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 1,464 மாணாக்கர்களுக்கு ரூ. 6.33 கோடி மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணாக்கர்களுக்கு உதவி தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,805 மாணாக்கர்களுக்கு ரூ. 71.90 இலட்சம் மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. முதுகலை பட்டப்படிப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் 518 மாணாக்கர்களுக்கு ரூ. 3.73 கோடி மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மடிக்கணினி திட்டத்தின் கீழ் 1,028 மாணாக்கர்கள் பயன் பெறவுள்ளனர்.

மேலும், இன்று பட்டம் பெற்ற மாணாக்கர்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து பெற்றோர்களை பெருமைப்படுத்தி வாழ்வில் சாதிக்க என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் இயக்குநர், இந்தியன் ஆயில் நிறுவனம் மற்றும் மூத்த துணை தலைவர், அசோக் லேலண்ட் மற்றும் புகழ்பெற்ற முன்னாள் மாணவர் - MIT திரு. கிருஷ்ணன் சடகோபன், தொழில்நுட்பக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச. விசாகன், இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழக வான்வெளி பொறியியல் துறை உறுப்பினர் மற்றும் உறுப்பினர், கூட்டுநர் குழு, பேரா. பி.டி. என் ஸ்ரீதர், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் (பொ) முனைவர் வி. குமரேசன் மற்றும் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் (பொ) முனைவர் பெ. சக்திவேல், கிண்டி பொறியியல் கல்லூரி புலமுதல்வர் முனைவர் பி. ஹரிஹரன், அழகப்பா தொழில்நுட்ப கல்லூரி புலமுதல்வர் முனைவர் எஸ். மீனாட்சிசுந்தரம், கட்டட கலை மற்றும் திட்டமிடல் பள்ளி புலமுதல்வர் முனைவர் கே. பிரதீப் மோசஸ், மெட்ராஸ் தொழில்நுட்ப கழகம் புலமுதல்வர் முனைவர் பி. ஜெயஸ்ரீ, துறைத் தலைவர்கள், இருபால் பேராசிரியர்கள், பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி சிறப்புரை

## ஆவடி பகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர் பிப் 06;

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு. நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி ஆவடி மாநகராட்சி அருகில் கலைஞர் திடலில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் இன்று 06-02-2026 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெறுகிறது

பகுதி கழகச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், ஆவடி மேயர் ஜி. உதயகுமார் பகுதி கழக செயலாளர் பேபி சேகர், பொன்.விஜியன், ஜி.நாராயண பிரசாந்த், என். இ. கே. மூர்த்தி, தி. வை. ரவி, டி. தேசிங்கு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

ஆவடி தெற்கு பகுதி நிர்வாகிகள் இரா.ருக்கு, கோ.கார்த்திகேயன், தா.வின்செண்ட், கீதா யுவராஜ், இரா.செல்வராஜ், எம்.பாலா, வி.ஹரி, எம். குமார், எம்.ராஜேந்திரன், ஏ. கே.சகாபுதீன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம் பி கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி உரையாற்றுகிறார்

இந்நிகழ்ச்சியில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் மாநில நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், ஜி.ஜெரால்டு, தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிகா, பி டி சி.செல்வராஜ், மாவட்ட கழக நிர்வாகிகள் மா.ராஜி, வி. ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன் / தொழுவூர் பா.நரேஷ் குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார் ஜெ.மகாதேவன் காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் ஒன்றிய நகர பேரூர் கழகச்செயலாளர்கள் G.R.திருமலை ப.ச.கமலேஷ் ஆர்.ஜெயசீலன் சே.பிரேம்ஆனந்த், த.தங்கம் முரளி, தி. வே.முனுசாமி டி.முரளி கிருஷ்ணன், மற்றும் ஆவடி மாநகர நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் இன்னால் முன்னால் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் நிகழ்ச்சி முடிவில் வட்ட கழகச் செயலாளர் யுவராஜ், சத்யா கோ ரவி ஆகியோர் நன்றி கூறுகிறார்கள் என மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் தமது அறிக்கையை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.

### தாம்பரம் மாநகரம்

## பெருங்களத்தூர் வடக்கு - தெற்கு - தாம்பரம் மேற்கு செயல் வீரர்கள் கூட்டம்!

### டி.ஆர்.பாலு,எம்.பி – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தாம்பரம்,பிப்.6-

தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட, பெருங்களத்தூர் வடக்குதெற்கு,மற்றும் தாம்பரம்மேற்கு பகுதி, திராவிட முன்னேற்றக் கழகம்,நடத்தும் செயல் வீரர்கள் கூட்டம், இன்று (6.2.2026) மாலை 4 மணியளவில் (மேற்கு தாம்பரம்,முடிச்சூர் ரோட்டில்,உள்ள தாம்பரம் வட்டார நாடார் சங்க திருமண மாளிகையில், 4மண்டல தலைவரும் பகுதி கழக செயலாளர்டி.காமராஜ், 5மண்டலத் தலைவரும், பகுதி கழக செயலாளர், எஸ் இந்திரன், ஆகியோர்கள் தலைமையில், பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர்,மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்கள் குழு தலைவர், பெருங்களத்தூர் எஸ்.சேகர் வரவேற்புரையிலும் பகுதி கழக அவை தலைவர்கள்,தாம்பரம் மாநகராட்சி கழக கொறடா,டி.ஆர். கோபி வி.முனுசாமி ஜெ. மணிவண்ணன் ஆகியவர்கள் முன்னிலை யில்,கழகப் பொருளாளர், நாடாளுமன்ற மக்களவைக்குழு தலைவர்,டி.ஆர்.பாலு எம்.பி,பி.எஸ்.சி, மாண்புமிகு குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், தா.மோ.அன்பரசன்,தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர், எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ, தலைமை தீர்மானக் குழு செயலாளர், மீ.அ.வைதிலிங்கம்எக்ஸ். எம்.எல்.ஏ., ஆகியோர்கள் கலந்து கொண்டு, கருத்துக்களையும் ஆலோசனையும் வழங்க உள்ளனர்,

நிகழ்ச்சியில் மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர், கோ.காமராஜ் தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி மேலும்,தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,வட்டச்செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,பகுதி, வட்டக் கழக, நிர்வாகிகள், இளைஞரணி,உள்ளிட்ட மாவட்டம், மாநகர, பகுதி, வட்ட,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர், பி.எல்.ஏ.ஃ2, பி.எல்.சி பி.டி.ஏ,பாக இளைஞரணி, மகளிர் அணி,மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு. பகுதி கழக செயலாளர்கள், டி.காமராஜ் எஸ்.இந்திரன், எஸ்.சேகர் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.





தாம்பரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு இந்து அறநிலைத்துறை அருள்மிகு செல்வ விநாயகர் & கோதண்டராமர் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவு நாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்வில் அமைச்சர் சி.வி.கணேசன், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., கலந்து கொண்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர்களுடன் உணவு அருந்தினார்கள். உடன் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர் ரமணிஆதிமுலம், எஸ்.ஜி.கருணகர பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுடன் உணவு அருந்தினார்கள்.இதில் பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள்,கழக தோழர்கள், மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.





தாம்பரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர திமுக சார்பில் தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் மேலும் தாம்பரம் சண்முக சாலையில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் அண்ணா அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இதனை தொடர்ந்து சண்முக சாலையில் இருந்து அமைதி பேரணியாக தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் உடன் மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன் மற்றும் மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி மகளிர் அணியினர் கழக தோழர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.




சென்னை எம்.ஓ.பி. வைஷ்ணவ மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்வு செம்மொழிப் பூங்காவில் நடைபெற்றது.இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் அவர்கள், மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், துறை சார்ந்த அரசு அதிகாரிகள் கலந்துகொண்டு, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.